யார் ஆட்சிக்கு வரக்கூடாது என்பதற்கான தேர்தல்

‘இந்தியா’ கூட்டணி வெற்றிக்கு உத்வேகத்துடன் களப்பணியாற்ற வேண்டும்

தி.மு.க.வினருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கட்டளை

சென்னை, மார்ச்.22–

‘இந்தியா’ கூட்டணியின் வெற்றிக்கு உத்வேகத்துடன் களப்பணியாற்ற வேண்டும் என்று தி.மு.க.வினருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கட்டளையிட்டுள்ளார்.

தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

இந்தியாவை மீட்பதற்கான அறப்போராட்டக் களத்தில் உங்களுடன் இணைந்து நானும் நிற்கிறேன். தி.மு.க.வின் தலைமையிலான கொள்கைக் கூட்டணி தமிழ்நாட்டிலும், புதுச்சேரியிலும் உள்ள 40 தொகுதிகளை தோழமைக் கட்சிகளுடன் இணக்கமாக பங்கிட்டுக் கொண்டு களம் காண ஆயத்தமாகி விட்டது. அண்ணா அறிவாலயத்தில் நடந்த நிகழ்வில் 2024 நாடாளுமன்றத் தேர்தல் களத்திற்கான தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையை வெளியிட்டு, தி.மு.க. சார்பில் களமிறங்கும் 21 வெற்றி வேட்பாளர்களையும் தலைவர் என்ற முறையில் உங்களில் ஒருவனான நான் அறிவித்தேன்.

40 தொகுதிகளிலும் நானே நிற்கிறேன்

எந்தவொரு தேர்தல் களமாக இருந்தாலும் எதனை அடிப்படை நோக்கமாக கொண்டு களம் காண்கிறோம் என்பதை தேர்தல் அறிக்கை வாயிலாக தெள்ளத் தெளிவாக தெரிவித்து மக்களைச் சந்திப்பதுதான் அண்ணா காலத்திலிருந்து தி.மு.க. கடைப்பிடித்து வருகிற தேர்தல் நடைமுறை. அதன் வெளிப்பாடுதான் தி.மு.க. சார்பில் வெளியிடப்பட்டுள்ள 64 பக்க தேர்தல் அறிக்கை.

40 தொகுதிகளில் தனித்தனி வேட்பாளர்கள் நின்றாலும், அனைத்துத் தொகுதிகளிலும் உங்களில் ஒருவனான இந்த ஸ்டாலின்தான் வேட்பாளராக நிற்கிறேன் என்கிற உணர்வுடனும் கொள்கை உறவுடனும் ‘இந்தியா’ கூட்டணி வெற்றிபெற்று ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திட வேண்டும் என்ற உத்வேகத்துடனும் களப்பணியாற்றிட வேண்டும் என ஒவ்வொரு உடன்பிறப்பையும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

உங்களின் களப்பணிகளை ஊக்கப்படுத்தவும், தமிழ்நாட்டு வாக்காளப் பெருமக்களின் ஆதரவைத் திரட்டிடவும், 40 தொகுதிகளிலும் நமது கூட்டணியின் வெற்றியை உறுதி செய்திடவும் ஒவ்வொரு நாடாளுமன்றத் தொகுதிக்கும் நேரில் வருகிறேன்.

2024 நாடாளுமன்ற தேர்தல் களத்தில் நாம் சந்திக்கும் எதிரிகள் நமக்கான அரசியல் எதிரிகள் மட்டுமல்ல, இந்தியாவின் எதிரிகள். மொத்தமாகச் சொல்வதென்றால், மனித குலத்தின் எதிரிகள். பிரதமர் என்கிற மாண்புக்குரிய பொறுப்பை வகிப்பவர் தொடங்கி மத்திய மந்திரிகள், இணை மந்திரிகள் கட்சி நிர்வாகிகள் என அத்தனை பேருமே பொய்யை மட்டுமே பிரச்சாரமாக மேற்கொண்டு வருவதை கடந்த சில நாட்களாக தமிழ்நாட்டின் வாக்காளர்கள் உன்னிப்பாக கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். தமிழ்நாட்டுக்கு கடந்த 10 ஆண்டு கால ஆட்சியில் என்னென்ன திட்டங்களை கொண்டு வந்தோம் என்பதை சொல்வதற்கு எதுவும் இல்லாமல் தி.மு.க.வை விமர்சிப்பதும், தி.மு.க. ஆட்சி மீது வீண்பழி போடுவதும், தி.மு.க. கூட்டணி பக்கம்தான் தமிழ்நாட்டு மக்கள் இருக்கிறார்கள் என்பது உறுதியாகத் தெரிவதால், தமிழர்களையே தீவிரவாதிகள் எனச் சித்தரிப்பதும் பா.ஜ.க.வின் பிரச்சார ‘பார்முலா’வாக இருக்கிறது.

தேர்தல் அல்ல, அறப்போர்க்களம்

நம்மிடம் தந்தை பெரியாரின் சமூகநீதிக் கொள்கை உள்ளது. ஜனநாயகக் களத்தை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்கிற கண்ணியத்தைக் கற்றுத் தந்த பேரறிஞர் அண்ணாவின் வழிமுறை இருக்கிறது. கருணாநிதியின் வழியில் தொடரும் ஆட்சியின் சாதனைகள் நிறைந்திருக்கிறது. அவற்றைத் தேர்தல் களத்தின் ஆயுதங்களாக் கையில் ஏந்துவோம். 10 ஆண்டு கால பா.ஜ.க. ஆட்சியில் தமிழ்நாடு எப்படி வஞ்சிக்கப்பட்டுள்ளது என்பதை வீடு வீடாகச் சென்று ஒவ்வொரு வாக்காளரிடமும் எடுத்துச் சொல்வோம். அதற்கு அண்ணா தி.மு.க எப்படி துணைபோனது என்கிற துரோகத்தையும் மறக்காமல் எடுத்துரைப்போம். தனித்தனியாக நிற்கும் கள்ளக்கூட்டணியின் முகத்திரையைக் கிழித்திடுவோம். ‘வாட்ஸ்அப்’ உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் பரப்பப்படும் பொய்களையும் வதந்திகளையும் முறியடிக்கும் வகையில் ‘ஆன்லைன்’ பரப்புரையையும் முனைப்புடன் மேற்கொள்வோம். ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கு உட்பட்ட வாக்காளர்களிடமும் தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவைத் திரட்டுவோம். ஒவ்வொரு வாக்கும் நம் ‘இந்தியா’வின் வெற்றியை உறுதி செய்யட்டும்.

யார் ஆட்சிக்கு வரக்கூடாது என்பதற்கான தேர்தல்

இதுவரை நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல்கள் அனைத்தும் யார் ஆட்சிக்கு வரவேண்டும் என்பதை முடிவு செய்வதற்கான தேர்தல்களாக இருந்தன. இந்த முறை யார் ஆட்சிக்கு வரவே கூடாது என்பதற்கான தேர்தல் களமாக அமைந்துள்ளது. இது வெறும் தேர்தல் களமல்ல, ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டிய அறப்போர்க்களம். இந்தப் போரில் நாம் வென்றாக வேண்டும். ஓயாது உழைத்தால் உறுதியான வெற்றி நிச்சயம். நாற்பதும் நமதே! நாடும் நமதே!! இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

கெஜ்ரிவால் கைது நடவடிக்கையால் இந்தியா கூட்டணியின் வெற்றி உறுதியாகிறது: ஸ்டாலின்

சென்னை, மார்ச்.22

அரவிந்த் கெஜ்ரிவால் கைது நடவடிக்கையால் பா.ஜனதாவுக்கு எவ்வித பயனும் இல்லை என்றும், இந்தியா கூட்டணியின் வெற்றி உறுதியாகிறது என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்து உள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:

2024 மக்களவைத் தேர்தல் நெருங்கும் நேரத்தில், தனது 10 ஆண்டு ஆட்சியின் அவலங்களை நினைத்தும், தோல்வி உறுதியாகி உள்ளதாலும் அஞ்சி நடுங்கும் பாசிச பா.ஜ.க. அரசு, சகோதரர் ஹேமந்த் சோரனைத் தொடர்ந்து, டெல்லி முதல் மந்திரி அரவிந்த் கெஜ்ரிவாலைக் கைது செய்து, அருவருக்கத்தக்க நிலைக்குத் தரந்தாழ்ந்துள்ளது. ஒரே ஒரு பா.ஜ.க. தலைவர் மீது கூட விசாரணையோ, கைது நடவடிக்கையோ இல்லை என்பதில் இருந்தே அவர்களின் அதிகார அத்துமீறலும், ஜனநாயகச் சிதைப்பும் அப்பட்டமாகிறது. எதிர்க்கட்சித் தலைவர்கள் மீதான இத்தகைய தொடர் பழிவாங்கும் நடவடிக்கைகள் அவர்களை பா.ஜ.க. அரசு குறிவைத்து வேட்டையாடுவதை வெட்டவெளிச்சம் ஆக்குகிறது.

இந்த கொடுங்கோன்மை பா.ஜ.க.வின் முகத்திரையை முற்றிலுமாகக் கிழித்தெறிந்து மக்களிடம் சீற்றத்தைத் தூண்டியுள்ளது. ஆனால் இந்த கைது நடவடிக்கைகளால் அவர்களுக்கு எந்தப் பயனும் இல்லை. மாறாக, நாங்கள் மேலும் உறுதியடைகிறோம். இந்தியா கூட்டணியின் வெற்றி உறுதியாகிறது.

மக்களின் சினத்தை எதிர்கொள்ளத் தயாராக இரு பா.ஜனதாவே!

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

BEFORE THE HON’BLE XIX ADDITIONAL CITY CIVIL COURT, CHENNAI
I.A.No. 6 of 2023
IN
O.S.No. 1974 of 2019

1.Mrs.Theresa (Deceased), ...
Petitioner/ Plaintiff (deceased)
2.P.C.Maria Joseph (Deceased), ...
Petitioner/ Plaintiff (deceased)
3.N.Samkirubakaran, S/o. P.C.Maria Joseph
... Petitioner/ Plaintiff
-Vs-
1.Mr. V. Shanmugham, & 7 Others. ...
Respondents/ Defendants

Please take notice that our client Mr. N.Samkirubakaran, has filed I.A.No.6 of 2023 and sought for the appointment of Advocate Commissioner. When the said matter came up for hearing on 15.03.2024, the Hon’ble Court was pleased to order substituted service against the 2nd Respondent namely,
(R-2) Mr.V.Jayaraman, S/o.Mr.Varadhan, No.5A, Guber Nagar, Orrapakkam, Kancheepuram District-603 202
and the case is posted on 01.04.2024.
Hence please take notice that you are hereby asked to appear before the Hon’ble XIX Additional City Civil Court, Chennai in I.A.No.6 of 2023 either in person or through a Counsel duly instructed by you on 01.04.2024 failing which the matter may be decided on your absence and on merits.
Dated at Chennai on this the 22nd day of March 2024.

K. THILAGESWARAN
Counsel for Petitioner/ Plaintiff

பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

கார்ப்பரேட் அலுவலகம்: செரிப்ரம் ஐடி பார்க் B2 பில்டிங், 5வது தளம், கல்யாணி நகர், புனே, மகாராஷ்டிரா 411014
கிளை அலுவலகம்: பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், கீழ் தளம், சேட்டோ டி அம்பா, எண்.37, நெல்சன் மாணிக்கம் சாலை, சென்னை – 600 029
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி விவரங்கள்: பெயர் : ரதீஷ் ராமச்சந்திரன், Email ID: Rathish.ramachandran@bajajfinserv.in, Mob No. 9940286237/ 9940155459/ 8669189048

கடனீட்டுக் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002ன் கீழ் (‘சட்டம்’) அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான மின்னணு ஏலத்திற்கான பொது அறிவிப்பு

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்/உடன் கடன்தாரர் பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (‘BHFL’)க்கு கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்தை அடமானம் வைத்துள்ளார் என்று இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது. SARFAESI சட்டம் 2002 மற்றும் அங்குள்ள விதிகளின்படி அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் மேற்கூறிய அசையா சொத்து (‘பாதுகாக்கப்பட்ட சொத்து/சொத்து’) கையகப்படுத்தப்பட்டது. கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி BHFLக்கு செலுத்த வேண்டிய கடன் நிலுவைத் தொகை, பெருந்தக்கூடிய வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவுகள் போன்றவற்றை பெறுவதற்காக பாதுகாக்கப்பட்ட சொத்து பொது ஏலத்தின் மூலம் விற்கப்படும். கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள், விதி எண் 8 மற்றும் 9ன் கீழ் (இனிமேல் விதிகள் என குறிப்பிடப்படுகிறது) பாதுகாக்கப்பட்ட சொத்து விற்பனை மற்றும் “எங்கே இருக்கிறதோ அதுபோல்”, “எதுவாக இருந்தாலும்”, “எப்படி இருந்தாலும்” மற்றும் “ஆதாரம் இல்லாத” அடிப்படையில்” 23/04/2024 அன்று ஏலம் நடைபெறும். மற்றும் அதற்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

கடன் கணக்கு விவரங்கள்/ கடன்தாரர்/கள் & உத்தரவாத தாரர்கள் பெயர் மற்றும் முகவரி	1. மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம் 2. EMDஐ சமர்ப்பிக்க கடைசித் தேதி 3. சொத்தை பார்வையிடுவதற்கான தேதி மற்றும் நேரம் 4. சொத்து விவரம்	1 ரிசர்வ் விலை 2 சொத்துக்கான EMD 3 ஏல அதிகரிப்பு
LAN No. H403HHL0559699 & H403HLT0566060 & H403HLT0566060 & H403HLT0566061 1. வார்தீல்வரன் D (கடன்தாரர்) 2. எஸ்.ஆர். வருணி (உடன் கடன்தாரர்) இருவரது வசிப்பிடம்: மனை 1 மற்றும் 2, எஸ்2, ராம் கார்டன், முதல் தெரு, பெரும்பாக்கம், சென்னை – 600 100. மொத்த நிலுவைத் தொகை: 16.03.2024 அன்று ரூ.62,83,671/- (ரூபாய் அறுபத்திரண்டு லட்சத்து எண்பத்து மூன்றாயிரத்து அறுநூற்று எழுபத்தியொன்று மட்டும்) மற்றும் எதிர்கால வட்டி மற்றும் சேர்த்துள்ள கட்டணங்கள்	1. மின்னணு ஏலத் தேதி 23.04.2024 காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை, 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்புடன் 2. கேஒய்சி உடன் EMDஐ சமர்ப்பிக்க கடைசித் தேதி 22.04.2024 அன்று மாலை 5.00 மணி வரை (இந்திய நேரப்படி) 3. சொத்தை பார்வையிடுவதற்கான தேதி 22.03.2024 முதல் 20.04.2024 வரை காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை (இந்திய நேரப்படி)	ரிசர்வ் விலை : ரூ.54,00,000/- (ரூபாய் ஐம்பத்து நான்கு லட்சம் மட்டும்) EMD : ரூ.5,40,000/- (ரூபாய் ஐந்து லட்சத்து நாற்பதாயிரம் மட்டும்.) ரிசர்வ் விலையில் 10% ஏல அதிகரிப்பு ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மற்றும் அதன் மடங்குகளில்

அசையா சொத்து குறித்த விவரம்: விவசாய நிலம் அல்லாத சொத்து மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும்: பிளாட் எண்.எஸ்2, இரண்டாவது தளம், சூப்பர் பில்டப் ஏரியா 1235 சதுர அடி (பொதுப் பகுதி 277 சதுர அடியை உள்ளடக்கி உள்ளது) மற்றும் கவர்டு கார் பார்க்கிங். திட்டத்தின் பெயர் “நெஸ்ட் சார்ம்”, மொத்தம் 6110 சதுர அடி நிலத்தில் பிரிவுபடாத பங்கு நிலம் 567 சதுர அடி. சிஎம்டிஏ அங்கீகரித்த உப பிரிவு திட்டத்தின்படி மனை எண்கள்.1 மற்றும் 2, ராம் கார்டன், முதல் தெரு, பழைய சர்வே எண்.429/21, பழைய பட்டா எண்.2463, ச.எண். 429/310, புதிய ச.எண்.429/310பி, பெரும்பாக்கம் கிராமம், தாம்பரம் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம், தற்போது செங்கல்பட்டு மாவட்டம் மற்றும் எல்லைகள்: வடக்கில் : மனை எண்.13 மற்றும் 12 ராம் கார்டன்ஸ் மற்றும் எம்.எஸ். ஏழுமலை மற்றும் மற்றவர்களுக்கு சொந்தமான நிலம், தெற்கு : சர்வே எண்.429/2எம்–ல் உள்ள நிலம், கிழக்கில் : 30 அடி சாலை (ராம் கார்டன் முதல் தெரு), மேற்கில் : ஜெ. மணியூலுக்கு சொந்தமான நிலம்.

பொது ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பின்வருமாறு:
1. பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டிற்கு தற்போதைய அல்லது எதிர்கால வில்லங்கங்களை அறிந்தோ அறியாமலோ **‘எங்கே இருக்கிறதோ அதுபோல்’, ‘எதுவாக இருந்தாலும்’, ‘எப்படி இருந்தாலும்’ மற்றும் ‘ஆதாரம் இல்லாத’** அடிப்படையில் பொது ஏலம் நடத்தப்படுகிறது. 2. குறைந்தபட்ச விலைக்கு கீழே பாதுகாக்கப்பட்ட சொத்து விற்கப்படாது. 3. ஏல விற்பனை இணைய ஏல போர்ட்டல் மூலம் ஆன்லைனில் இருக்கும். 4. மின்னணு ஏலம் https://bankauctions.in்ல் 23 ஏப்ரல் 2024 அன்று காலை 11:00 மணி முதல் நண்பகல் 12:00 மணி வரை ஒவ்வொன்றும் 5 நிமிடங்களுக்கு வரம்பற்ற நீட்டிப்புடன் நடைபெறும். 5. விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு நிறுவனத்தின் இணையதள URL https://www.bajajhousingfinance.in/auction-notices ஐப் பார்க்கவும் அல்லது எந்தவொரு தெளிவுபடுத்தலுக்கும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியுடன் https://bankauctions.in-ல் தொடர்பு கொள்ளவும்.

தேதி: 22.03.2024
இடம்: சென்னை
ஒப்பம்/– ரதீஷ் ராமச்சந்திரன்,
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

படிவம் எண். URC-2
அத்தியாயம் XXI-ம் பகுதி I-ன் கீழ் பதிவு செய்வது குறித்த அறிவிப்பை வழங்கும் விளம்பரம்
(நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 374 (பி) மற்றும் நிறுவனங்களின் விதி 4 (1) (பதிவு செய்யும் அங்கீகாரம்) விதிகள், 2014)

1. நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 366ன் துணைப்பிரிவு (2)ன்படி பதினைந்து நாட்களுக்குப் பின்னர், ஆனால் முப்பது நாட்கள் காலாவதி ஆகும் முன்னதாக, **மைக்ரோகோ எல்எல்பி** என்ற கூட்டாண்மை நிறுவனத்தை பங்குகளால் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக, நிறுவனங்கள் சட்டம் 2013 அத்தியாயம் XXI-ம் பகுதி I-ன் கீழ் பதிவு செய்ய பதிவாளர், சென்னை அவர்களிடம் விண்ணப்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது
2. நிறுவனத்தின் முக்கிய கொள்கைகள் கீழ்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளது : வாங்குதல், விற்பனை செய்தல், ஆராய்ச்சி செய்தல், மேம்பாடு, இறக்குமதி, ஏற்றுமதி, பரவும் நோய்களை எதிர்த்துப் போராடுவதற்கான பொதுவான தொடுபுள்ளிகளில் நுண்ணுயிர் வளர்ச்சிக் கட்டுப்பாட்டுக்கான விநியோக அமைப்புகளை வடிவமைத்தல் மற்றும் நுண்ணுயிர் பெருக்கத்தைத் தணிக்க கட்டுப்படுத்தப்பட்ட மற்றும் நீடித்த முறையில் ஆண்டிமைக்ரோபையல் உருவாக்கம் உள்ளிட்ட வர்த்தகத்தை மேற்கொள்ளுதல்
3. முன்மொழியப்பட்ட நிறுவனத்தின் வரைவு குறிப்பாணை மற்றும் ஆர்டிகிள்ஸ் ஆப் அசோசியேஷன் ஆகியவற்றின் நகலை அலுவலகம்: கோல்டன் ஜுபிலி பயோடெக் பார்க் பார் வுமன் சொசைட்டி, ஷெட் எண் 7, சிப்காட் ஐடி பார்க் சிறுசேரி கிராமம், எண்.38, செங்கல்பட்டு தாலுகா, காஞ்சிபுரம், தமிழ்நாடு 603103 என்ற முகவரியில் ஆய்வு செய்யலாம்.
4. இந்த விண்ணப்பத்தை எதிர்க்கும் எந்தவொரு நபரும், தமது ஆட்சேபணைகளை இந்த அறிவிப்பு வெளியான இருபத்தோரு நாட்களுக்குள்ளாக பதிவாளர், பிளாக் எண்.6, பி விங் 2வது தளம், சாஸ்திரி பவன் 26, ஹாடோஸ் சாலை, சென்னை 600034, தமிழ்நாடு என்ற முகவரிக்கு எழுத்துபூர்வமாக தெரிவிக்கலாம். அதன் நகல் ஒன்றை நிறுவனத்தின் பதிவு அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும்.

22 மார்ச், 2024 தேதியிடப்பட்டது
விண்ணப்பதாரர்களின் பெயர்கள்:
1. சுக்தீப் சிங், மைக்ரோகோ எல்எல்பி-ன் நியமிக்கப்பட்ட பங்குதாரர்
2. ரச்னா என் தேவ், மைக்ரோகோ எல்எல்பி-ன் நியமிக்கப்பட்ட பங்குதாரர்
3. ஜஸ்தீப் சிங், மைக்ரோகோ எல்எல்பி-ன் பங்குதாரர்
4. விகாஸ் சாமரியா, மைக்ரோகோ எல்எல்பி-ன் பங்குதாரர்
5. அனில் குமார் கெஜ்ரிவால், மைக்ரோகோ எல்எல்பி-ன் பங்குதாரர்

RELIANCE Asset Reconstruction

ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்

11வது தளம், வடக்குப் பக்கம், ஆர்–டெக் பார்க், மேற்கு எக்ஸ்பிரஸ் நெடுஞ்சாலை, கோரேகான் (கிழக்கு), மும்பை – 400 063

ஈடுபெற்ற ஆஸ்திகள் விற்பனை அறிவிப்பு (விதி 6(2) மற்றும் விதி 8(6)ஐ பார்க்கவும்)

2002ம் வருடத்திய கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் மற்றும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்க) விதிகள், 2002இன் விதி 8 (6)ன் கீழ் அசையா சொத்துகளின் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு. ஈடுபெற்ற கடன் வழங்கியவரிடம் அடமானம்/பிணையமாக வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா/அசையும் சொத்துகள் ஈடுபெற்ற கடன் வழங்கியவரின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் எடுக்கப்பட்டது என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் மற்றும் கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பாகவும் இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

இது, ரெலிகேர் ஹவுசிங் டெவலப்மெண்ட் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்டின் 29.03.2019 தேதியிட்ட ஒதுக்கீடு ஒப்பந்தத்தின்படி RARC 059 (RHDFCL HL) அறக்கட்டளையின் அறக்கட்டளையான நிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்டிற்கு (RARC), ஆதரவாக உங்கள் கடன் கணக்குகளின் நிதி சொத்துக்கள்/கடன்கள், அதன் உரிமை, பாத்தியதை மற்றும் வட்டி மற்றும் அடிப்படைப் பத்திரங்களுடன் ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய ஒப்பந்தத்தின் அடிப்படையில், நாங்கள் உங்கள் ஈடுபெற்ற கடன் வழங்குபவராக மாறிவிட்டோம் மற்றும் முழு ஒப்பந்த நிலுவைத் தொகையையும் திரும்பப் பெற சட்டப்பூர்வமாக உரிமை பெற்றுள்ளோம்.

எனவே, ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கம்பெனி லிமிடெட்டின் கீழ்க்கையொப்பமிட்ட அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கீழேயுள்ள அடமானம் வைக்கப்பட்ட சொத்துக்கள் பிரிவு 13(2)ன் கீழ் டிமாண்ட் நோட்டீசில் கண்டுள்ள தொகையை மீட்கவும் மற்றும் கூடுதல் வட்டி மற்றும் இதர கட்டணங்களை குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள்/அடமானதாரர்களிடம் இருந்து வசூலிக்க ஈடுபெற்ற கடன் வழங்கியவரான RARC 059 (RHDFCL HL) அறக்கட்டளையான ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்டின் கீழ்க்கையொப்பமிட்டவரால் 16.04.2024 அன்று “எங்கு எப்படி எவ்வாறு உள்ளதோ அப்படியே” என்ற அடிப்படையில் மின்னணு ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும் என்று 15 நாட்களுக்கு முன்னதாக உங்களுக்கு அறிவிக்கிறார். ரிசர்வ் விலை மற்றும் டேவணித் தொகை டெபாசிட் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

அடமான சொத்து குறித்த விவரம்:

வ. எண்	கடன்தாரர்கள் பெயர், சொத்து விவரங்கள், டிமாண்ட் மற்றும் சுவாதீன அறிவிப்பு தேதி	ரிசர்வ் விலை	டேவணித் தொகை டெபாசிட்
1	**வெங்கடாச்சலம்** R த/பெ. **ராமச்சந்திரன் மற்றும் கீர்த்தனா** V. **இருவரின் வசிப்பிடம்: கதவு எண் 5 மனை எண்** E 12 **ஸ்ரீ அபார்ட்மெண்ட் அஜீஷ் நகர் மெயின் ரோடு கோடம்பாக்கம் ங்காரலூரும், சென்னை, தமிழ்நாடு–600024. மேலும்: கதவு எண்.87, மனை எண்.** 322, **இரண்டாவது தளம், டிரம்ப்டிரம் 9வது குறுக்குத் தெரு, டிரஸ்டபுரம், கோடம்பாக்கம், சென்னை. சொத்து :** அதன் துண்டுகளும் பகுதிகளும். மனை எண். 322, டி.எஸ்.எண்.21, TSLR–ன்படி புதிய டி.எஸ். எண்.21/3, 2வது தளம், கதவு எண்.87, 9வது குறுக்குத் தெரு, பிளாக் எண்.26, டிரஸ்டபுரம் திட்டம், புலியூர் கிராமம், எழும்பூர் – நுங்கம்பாக்கம் தாலுக்கா, சென்னை மாவட்டத்தில் உள்ள 420 சதுர அடி பிளிந்த ஏரியா கொண்ட பிளாட் மற்றும் மொத்தம் 797 சதுர அடியில் பிரிவுபடாத பங்கு நிலம் 100 சதுர அடி. எல்லை: வடக்கில் : மனை எண்.321, தெற்கில் : மனை எண்.323, கிழக்கில் : டிரஸ்டபுரம் திட்டம், மேற்கில் 20 அடி சாலை, விஸ்தீரணம் 797 சதுர அடி. டிமாண்ட் நோட்டீஸ் : 17.11.2017 அன்று ரூ.20,24,787.04/– (ரூபாய் இருபது லட்சத்து இருபத்து நான்காயிரத்து எழுநூற்று எண்பத்தியேழு மற்றும் நான்கு பைசா மட்டும்) மற்றும் வருங்கால வட்டி மற்றும் இதர கட்டணங்கள். சுவாதீனத் தேதி : 27.03.2023	ரூ. 12,40,029/-	ரூ. 1,24,003/-

சொத்தை பார்வையிடுதல் : 12.04.2024 அன்று காலை 11.00 மணியிலிருந்து மதியம் 02.00 மணி வரை
ஏலத்தை சமர்ப்பிக்க கடைசி நாள் : 15.04.2024 அன்று மாலை 5.00 மணி வரை
மின்னணு ஏலம் நடைபெறும் தேதி : 16.04.2024 காலை 11.00 மணி முதல் பகல் 1.00 மணி வரை ஒவ்வொன்றும் 5 நிமிட நீட்டிப்புடன்

விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:
1. சொத்து ரிசர்வ் விலைக்கு கீழே விற்கப்படாது மற்றும் ஈடுபெற்ற கடன் வழங்கியவரான RARC ஆல் உறுதிப்படுத்தலுக்கு உட்பட்டது.
2. மின்னணு ஏலம் ஆன்லைனில் மெசர்ஸ் சி1 இந்தியா பிரைவேட் லிமிடெட், மனை எண்.68, குர்கான், ஹரியானா, பின்கோடு – 122003 மூலம் நடத்தப்படும்.
3. மின்னணு ஏலத்தில் பங்கேற்பதற்கு முன், ஏலம் எடுப்பவர்கள் முறையான மின்னஞ்சல் முகவரியை வைத்திருக்க வேண்டும் மற்றும் www.bankeauctions.com போர்ட்டலில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து, தங்கள் பயனர் ஐடி மற்றும் கடவுச்சொல்லை மெசர்ஸ் சி1 இந்தியா பிரைவேட் லிமிடெட்டிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.
4. மின்னணு ஏலத்தில் பங்கேற்க விரும்பும் வருங்கால ஏலதாரர்களுக்கு M/s. **சி1 இந்தியா பிரைவேட் லிமிடெட்,** (**தொடர்புகொள்ள வேண்டிய நபர்: திரு. தரணி கிருஷ்ணா, மொபைல் எண்.+91 994812222, Delhi@cinDia.com அல்லது** Support@bankeauctions.com (**உதவி எண்.7291981124, 25, 26**) அவர்களிடம் இருந்து ஆன்லைன் பயிற்சி பெறலாம்.
5. டேவணித் தொகை டெபாசிட் (EMD) RTGS/NEFT தொழி பரிவர்த்தனை மூலம் நடப்பு கணக்கு எண். 6742557088, வங்கியின் பெயர் : இந்தியன் வங்கி, கிளை : சாந்தாகுரூஸ் மேற்கு கிளை, மும்பை 400 054, பலன் பெறுபவர் பெயர் RARC 059 (RHDFCL HL) Trust, IFSC Code: IDIBOOOS010க்கு டெபாசிட் செய்யப்பட வேண்டும். காசோலைகள்/டிமாண்ட் டிராப்ட் ஆகியவை டேவணித் தொகை டெபாசிட்டிற்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.
6. ரிசர்வ் விலைக்கு கீழே உள்ள ஏலங்கள் மற்றும்/அல்லது டேவணித் தொகை டெபாசிட் செலுத்தப்படாத ஏலங்கள் ஏற்றுக்கொள்ளப்படாது. ஏலதாரர்கள் தங்களின் மேலதிக ஏலத் தொகையை ஒவ்வொன்றுக்கும் ரூ.5000க்கு அதிகமாக அதிகரிக்கலாம்.
7. வெற்றி பெற்ற ஏலதாரர் அறிவிக்கப்பட்ட உடனேயே வெற்றி பெற்ற ஏலதாரர் 25 சதவீத ஏலத்தொகை/விற்பனை விலையை (டேவணித் தொகை டெபாசிட் உட்பட) உடனே டெபாசிட் செய்ய வேண்டும். மீதமுள்ள ஏலத்தொகை/விற்பனை விலையில் 75 சதவீத நிலுவை தொகையை வெற்றிபெற்ற ஏலதாரரை அறிவித்த 15 நாளில் இருந்து வெற்றி பெற்ற ஏலதாரர் டெபாசிட் செய்ய வேண்டும்.
8. மேலே குறிப்பிட்டுள்ளபடி வெற்றிபெற்ற ஏலதாரர் விற்பனை விலையை டெபாசிட் செய்யத் தவறினால், டேவணித் தொகை டெபாசிட் உட்பட அனைத்து டெபாசிட்களையும் இழக்க நேரிடும்.
9. வெற்றி பெறாத ஏலதாரர்களின் டேவணித் தொகை மின்னணு ஏல விற்பனை நடவடிக்கைகள் முடிந்த ஏழு நாட்களுக்குள் வட்டி இல்லாமல் திருப்பித் தரப்படும்.
10. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கொடுக்கப்பட்ட விவரங்கள் அவருக்கு தெரிந்த வரை, நம்பிக்கை மற்றும் பதிவுகளின் சிறந்ததாகக் கூறப்படுகின்றன. அங்கீகரிக்கப்பட